# யுத்தத்தை நிறுத்துமாறு ஜே. வி. பி. கோருகிறது

(லண்டன்)
வடக்கு- கிழக்கில் யுத்தத்தை நிறுத்தி பிரச்சினைக்குத் அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென ஜே. வி. பியின் தலைவர் கோரியுள்ளார்.

தற்போதைய ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் சோமவன்ச அமரசிங்க தொலைபேசி மூலம் பி. பி. ஸி.க்கு அளித்த பேட்டியில் இதனைத்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 4 இதழ் 96
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 17 — 05 — 1992

## 'இடிஅமீனுக்கு' பின் முதல்வர் ஜெயலலிதா

[சென்னை]
'இடி அமீனுக்கு' பிறகு ஜெயலலிதாதான் சர்வாதிகாரி என்று நிரூபித்துவருகிறார். அப்படி ஆணவமாக ஆட்சி புரிந்தவர்கள் அடைந்த கதியைத்தான் இவரும் சந்திப்பார்.

இவ்வாறு பிரபல தமிழ் சஞ்சிகையான 'நக்கீரன்' ஆசிரியர் திரு. ராஜகோபால் 'இந்திய ருடே'க்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

## வெருகலில் 3 தமிழர் இராணுவத்தால் வெட்டிக்கொலை

[திருமலை]
திருகோணமலை மாவட்டத்திலுள்ள வெருகல் கிராமத்தில மூன்று தமிழர்கள் இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

வெருகலைச் சேர்ந்த க. சிவகரன் (21-வயது), த. திருபன் (42-வயது), எஸ். கணபதிப்

(4-ம் பக்கம் பார்க்க)

# ★ இந்திய அரசு புலிகளைத் தடை செய்தாலும் இலங்கை நிலைப்பாடு மாறாது

(கொழும்பு)
விடுதலைப்புலிகள்மீது இந்திய அரசு விதித்துள்ள தடை உத்தரவு இலங்கை அரசின் நிலைப்பாட்டை எவ்வகையிலும் பாதிக்காதென இலங்கை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இது குறித்து சாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு ஆராய்ந்து வருவ தெரிவிக்கப்படு கிறது.

இந்திய அரசு புலிகளைத் தடை செய்தமை அந்த நாட்டு விவகாரம். இதற்கும

(4ம் பக்கம் பார்க்க)

## இலங்கையிலும் புலிகளை தடைசெய்யக் கோரிக்கை

[கொழும்பு]
தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை இலங்கை அரசும் தடை செய்ய இலங்கை எதிர்க்கட்சிகள் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

புலிகள்மீது இந்தியா மேற்கொண்டுள்ள தடையை வரவேற்றுள்ள சுதந்திரக் கட்சி இலங்கையிலும் புலிகளை தடை செய்யவேண்டுமென கோரியுள்ளது.

புலிகள் விவகாரத்தில் இலங்கை அரசுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்த எதிர்க்கட்சிகள் முயலலாமெனவும் கூறப்படுகிறது.

[மா-சி]

## இலங்கை அரசுக்கு தமிழ் குழுக்கள் அழைப்பு

[கொழும்பு]
தமிழர் பிரச்னையைத் தீர்க்க மீண்டும் இலங்கை அரசுக்கு தமிழ்க் குழுககள் அழைப்பு விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் இந்தியாவில புலிகள்மீதான தடையை மேற்படி தமிழ்க்குழுககள வரவேற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது

இச்சந்தர்ப்பத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்த இவை இனி முயலும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

## ஐந்து சிங்களவர் அம்பாறையில் கொலை

[கொழும்பு]
அம்பாறை மாவட்டத்தில் உள்ள மகாஓயா பிரதேசத்தில் நேற்று அதிகாலை வெசாக் தினத்தையொட்டி பௌத்த விகாரைக்கு சென்றுகொண்டிருந்த ஒரு சிங்கள விவசாயியும் அவரின் குடும்ப அங்கத்தவர்கள் நால்வரும் இனந்

[4ம் பக்கம் பார்க்க]

## செட்டிகுளத்தில் படை குவிப்பு

[யாழ்ப்பாணம்]
செட்டிகுளம் பகுதியில் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகிறார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை இப்பகுதியில் ஆறு ராணுவ காவலரண்கள் புலிகளால் முற்றாகத் தகர்க்கப்பட்டதை அடுத்து இராணுவத்தினர் தமது நிலைகளை பலப்படுத்தி வருகின்றனர். இதற்காக பெருந்தொகையான படையினர் குவிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதேவேளை செட்டிகுளம் பகுதியில்இராணுவஎல்லைகளை விஸ்தரிக்கும் நடவடிக்கையும்

[4-ம் பக்கம் பார்க்க]

## இலங்கைப் பிரச்னையை தீர்க்க இந்தியா என்ன செய்யப்போகிறது!

### - கருணாநிதி கேள்வி

(சென்னை)
விடுதலைப் புலிகள் இயக்கம் மீது தடை விதித்துவிட்டு இலங்கைத் தமிழர் பிரச்னையை இந்திய மத்திய அரசு எவ்வாறு தீர்த்துவைக்கப் போகிறது என தி. மு. க தலைவர் திரு. மு கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அறிக்கை வெளியிட்ட திரு. கருணாநிதி

(4-ம் பக்கம் பார்க்க)

## திலகர் மறுப்பு

(லண்டன்)
மகா ஓயா சம்பவம், மஹரகம குண்டுவெடிப்பு, வெலிகந்த அழிஞ்சிப்பத்தனை கொலைகள் தொடர்பாக பாரிஸிலுள்ள விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகருடன் பி. பி. ஸி. செய்தி

(4ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. கோபாலசாமி எந்நேரமும் கைதாகலாம்

(சென்னை)
தி. மு. க. பிரமுகர் திரு. வை. கோபால்சாமியை தடா சட்டத்தின்கீழ் எந்த நேரமும் தமிழக அரசு கைது செய்யக்கூடும் என்ற தகவல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது

198? பெப்ரவரியில் திரு. கோபாலசாமி ரகசியமாக யாழ்ப்பாணம் சென்று விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் அகண்ட தமிழ்நாடு ஏற்படுத்தும் திட்டம் பற்றிப் பேசியதாகவும் ஈழம், இந்தியாவில் தனித்தமிழ் நாடு இரண்டும் சேர்ந்த தனித்தமிழ்நாட்டை உருவாக்க சதி செய்ததாகவும் இவர்மீது குற்றஞ்சாட்டப்படவிருக்கிறது.

இந்த அடிப்படையில் தடா சட்டத்தின்கீழ் திரு. வை. கோபால்சாமி எந்த நிமிடமும் கைது செய்யப்படலாம் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய மத்திய அரசு ஆட்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் பற்றி பேச, எழுத தடை!

(புதுடில்லி)
இந்தியாவில் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளதால் புலிகளை பற்றி பேசுவதும், எழுதுவதும் தடைசெய்யப்பட்டுள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

மேற்படி தடையை மீறி குற்றம் புரிபவர்கள் எவராக இருந்தாலும் 'தடா' சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு 5

(4.ம் பக்கம் பார்க்க)

## இரு அமைச்சர்களுக்கு கொலைப்பயமுறுத்தலாம்!

[கொழும்பு]
தம்புள்ளை உல்லாச பயண விடுதித் தகராறு மேலும் வளர்ச்சியடைந்து ஒரு பௌத்தபிக்கு உட்பட இரண்டு அமைச்சர்களுக்கு கொலைபயமுறுத்தல்கள் விடுக்கும் அளவுக்கு உச்சக்கட்டம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தம்புள்ளை பகுதியில் வெகு

(4-ம் பக்கம் பார்க்க)

## 10 படையினரை காணவில்லையாம்

(கொழும்பு)
அநுராதபுரம் வடக்கு பகுதியில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல் சம்பவமொன்றில் 10 படையினர் காணாமல் போயுள்ளதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[4ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### நோவுவைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவுஎண்ணெ கிடைக்குமிடம் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6256)

### ஆங்கில இலக்கியம்

யாழ். பல்கலைக்கழக G. A Q. இலக்கிய நூல்கள்; Animal Farm, Withering Heights, Heart of Darkness சில பிரதிகளே விற்பனைக்கு உண்டு. வேறும் பல இலக்கிய நூல்களும் உண்டு. பூபால சிங்கம் புத்தகநிலையம், யாழ்ப்பாணம். (எ-2138)

### புத்தகங்கள் விற்பனைக்கு

தரமான புத்தகங்களும், துளிர், சலனம், சுபமங்களா, வெளி,முன்றில் போன்ற சஞ்சிகைகளும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். ஈழத்து எழுத்தாளர்களின் வெளியீடுகளும் விற்பனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். (சி-6291)

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் யாவற்றையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேடகழிவும், மாணவர்களுக்கு விசேட சலுகையும்வழங்கப்படும். 'சோபிதா' புத்தகசாலை. இல. 363, காங்கேசன்துறை வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகாமையில்) யாழ்ப்பாணம். (எ-2106)

### கணிதம் O/L

92, 93 விசேட கவனிப்பு ஆரம்பத்தில் இருந்து உயர்ந்த பெறுபேறுகள் அடையக்கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc (Cey) 83, சிவன்கோவிலடி திருநெல்வேலி. (சி-6301)

### பரீட்சை (ஆண்டு 5 - 4)

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 17-05-92 ஞாயிறும், ஆண்டு 4 பரீட்சை 24-05-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி 6314)

### G. C. E. A/L 93/94 பௌதிகவியல்

தனிப்பட்டமுறையில் (Individual Class) பௌதிகவியல், தூய கணிதம், பிரயோக கணிதம் மிகச் சிறப்பாக ஏராளமான பயிற்சிகளோடு அனுபவம் பெற்ற ஆசிரியரால் கற்பிக்கப்படுகின்றது R. பாலசுப்பிரமணியம் B. Sc., (Cey.) Dip. in Ed. 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி 6315)

### மணமகன் தேவை

ரோகிணி நட்சத்திரம் 3ம் பாதம், 34 வயதுடைய அழகிய மணமகளுக்கு சைவ போசனமுடைய உள்நாட்டில் உத்தியோகம் பார்ப்பவர் அல்லது வெளிநாட்டு மணமகன் தேவை. செ. விஜயரத்தினம், இலட்சுமி திருமணச் சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி 6295)

### தேவை

1500 சக்தியுள்ள ஜெனறேறறர் தினமும் இரவில் 10-00 மணித்தியாலங்கள் வேலை செய்வதற்குத தேவை விண்ணப்பிக்கவம்: விளம்பர இல: சி 2152, மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். (சி 2152)

கமிஷன் அடிப்படையில், ஸ்தாபனத்தில் கடமைபுரியத் தகுதியும், திறமையுமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சகல விபரங்களுடன் 28-05-1992க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: சி 2151, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 2151)

### மணமகள் தேவை

யாழ். இந்து, பூசம் 4ம் பாதம் 7ல செவ்வாய் (குறைந்த பாவம்) உடைய 32 வயது கனடாவில் வேலை பார்க்கும் மணமகனுக்குப் படித்த, அழகான மணமகள் தேவை. தற்போது பெண் கனடாவில் வசிப்பவராக இருந்தாலோ அல்லது வேறு நாட்டிலிருந்து கனடாவுக்குப் போகத்தக்கவர்களாக இருந்தாலும் விரும்பத்தக்கது. தொடர்பு; விளம்பர இலக்கம் சி 6317, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி 6317)

### WANTED

English Typist on piecerate basis, with working experience. Apply: Mrs. R.Ramalingam [Teacher], K. K. S. Road, Chunnakam. (C 6316)

## 31ம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**செ. பீற்றர் திசநாயகம்**

உதயம்: 29-06-1931 அஸ்தமனம்: 17-04-1992

தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுகி
அல்லும் பகலும் இறைவனைத் தொழுது
இறைமகன் இறந்த அதே நாளில்
இயற்கை யெய்திய அன்புத் தெய்வமே!

உங்கள் ஆன்மா பரம பிதாவின் மடியில் வீற்றிருந்து நித்திய பேரின்ப சுகம் காணப் பிரார்த்திக்கும்:

— குடும்பத்தினர்

எமது குடும்பத் தலைவர் காலமான செய்தி கேட்டு ஓடோடி வந்து எமக்குப் பல வகைகளாலும் உதவி செய்த உடன்பிறப்புக்கள், உறவினர், அயலவர், நண்பர்களுக்கும், இன்னும் தோன்ருத் துணையாய் நின்று, குறிப்பறிந்து செயலாற்றிய அன்பு நெஞ்சங்களுக்கும் 'வெள்ளை மாளிகை' ஸ்தாபனத்தாருக்கும். அவரது இறுதி யாத்திரையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது குடும்பத்தினர் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்ருேம்.

— திசநாயகம் குடும்பத்தினர்

49/A, வேம்படி ரோட்,
யாழ்ப்பாணம். (சி-6252)

## கிராம உத்தியோகத்தர்களினுல் விவசாய செயற்படுத்தல்

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டம் முழுவதும் கிராம உத்தியோகத்தர்களினுல் 1992ம 1993ம் ஆண்டுக்கான விவசாயசெயற்படுத்தல் நிகழ்ச்சித் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் கமநல சேவை நிலையங்களினுல் மேற்கொள்ளப்பட்டு வந்த விவசாய செயற்படுத்தல் நிகழ்ச்சித்திட்டவேலைகள் இந்த ஆண்டு கிராம உத்தியோகத்தர்களினுல் மேற்கொள்ளப்படவுள்ளன.

1992ம்,1993ம் ஆண்டுகளில் காலபோகம், சிறுபோகத்தின் போது மேற்கொள்ளப்படவுள்ள விவசாய உற்பத்தி தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்படவுள்ளன. (137)

## மெய்வல்லுனர் போட்டி

(நாவற்குழி)

கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலையின இல்ல மெய்வல்லுனர் போட்டியில் துர்க்கா இல்லமும் இலக்குமி இல்லமும் 404 புள்ளிகளைப் பெற்று முதலாம்இடம் பெற்றன. சரஸ்வதி இல்லம் 70 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றது.

வித்தியாசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இப் போட்டியை தென்மராட்சி தளபதி திரு. பரணி ஆரம்பித்துவைத்தார். தென்மராட்சிப் பிரிவு மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. புரட்சி. சாவகச்சேரி நகர் கொத்தணி அதிபர் திரு. சிவபாதசுந்தரம், சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் திரு. நவரத்தினராசா ஆகியோர் இப்போட்டியில் கலந்துகொண்டனர். திருமதி சிவபாதசுந்தரம் பரிசில்களை வழங்கினுர். (107)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கும், விளையாட்டுக் கழகங்களுக்கும் மிகவிரைவில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப்போட்டிகள் சம்பந்தமான கலந்துரையாடல் இம் மாதம் 19ம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ் செயலகத்தில் யாழ். அரச அதிபர் தலைமையில் 19ம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் இக்கலந்துரையாடலில் தீவகப் பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகங்களில் தலைவர், காரியதரிசி ஆகியோரை கலந்துகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர். (வி)

## கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

தவக்கால நற்சிந்தனைக் கருத்தரங்கு, அண்மையில் அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் யாழ். தொடர்பகத்தைச் சேர்ந்த அருட்திரு. போல் நட்சத்திரம், அருட்திரு. லம்பேட் அடிகள் ஆகியோர் பரிசுத்த வாழ்க்கை பற்றியும், முன்மாதிரிக் கிறிஸ்தவம் பற்றியும் மறையுரை நிகழ்த்தினர். (154)

## யாழ். நகரில் மன்னூர் அகதிகள்

(அரியாலை)

வவுனியா – தாண்டிக்குளம் வேப்பங்குளம் பகுதிகளிலுள்ள மன்னூர் அகதிகளும், மடு அகதி முகாமிலுள்ள மன்னூர் அகதிகளும் யாழ். நகர் வந்து உறவினர்கள் இல்லங்களில் தங்கியுள்ளதாக தெரியவருகிறது. (59)

ஊர்காவற்றுறை

## குடும்ப அட்டைகள்

[ஆனைப்பந்தி]

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு குடும்ப பதிவு அட்டைகள் தற்போது யாழ். அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள ஊர்காவற்றுறை கிராமசேவையாளர்களின் அலுவலகத்தில் வழங்கப்படுகின்றன. [101]

## பரிசளிப்பு வைபவம்

(மானிப்பாய்)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினுல் கடந்த பெப்ரவரியில் நடாத்தப்பட்டபேச்சுப்போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் இம்மாதம் 30ம் திகதி யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சம்மேளனத்தின் தலைவர் இ. தவகோபால் தலைமையில் நடைபெறும். [71]

## காப்பரன் 2வது இதழ்

(யாழ்ப்பாணம்)

பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றிய வெளியீடான 'காப்பரன்' 2வது இதழ் வெளிவந்துள்ளது.

தென்னை மரங்கட்கு பசளை இடும் முறைகள், தமிழீழத்தின் இராச பயிர்கள் கடந்த நூற்றுண்டில் பனையின் முக்கியத்துவம், பனையில் இருந்து சில மருத்துவப் பயன்கள். ஆகிய கட்டுரைகளும், பேட்டி சிறுகதைகள், கவிதை போன்ற பல முக்கிய அம்சங்கள் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. (சு)

தீவக

## மாணவர்களுக்கு புதிய பாடசாலை

(நாவற்குழி)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்து நாவற்குழி ஐயனுர் முகாமில் தஞ்சமடைந்துள்ள மாணவர்களின் நலன்கருதி நாவற்குழியில் பாடசாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வேலணைக் கல்விக் கோட்டத்தினுல் நிர்வகிக்கப்படும் இப்பாடசாலையை யாழ்ப்பாணம் செயலகத் திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் திறந்து வைத்தார்.

அதிபர் க. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற இத் திறப்புவிழா வைபவத்தில் வேலணைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி உட்பட பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினுர்கள். (107)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சங்கீதபூஷணம் எல். திலகநாயகம் போல், கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இசை உலகில் ஆற்றிய பணியைப் பாராட்டுமுகமாக எதிர்வரும் 22ம் திகதி நல்லை ஆதீனக் கலா மண்டபத்தில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் பாராட்டுப் பட்டமளிப்பு விழா நடைபெறவுள்ளது.

## சனசமூகநிலைய திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

அன்னை திரேசா சனசமூக நிலையத் திறப்புவிழா அண்மையில் திரு. ம. பி இராசநாயகம் தலைமையில் நடைபெற்றது. வலி. கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாஜத்தலைவர் திரு. வி. வி. இராசரத்தினம் நிலையத்தைத் திறந்துவைத்தார். (அ)

சகல பொதுச்சபை பிரதிநிதிகளுக்கும்

## விசேட பொதுக்கூட்டம்

### 23-05-1992

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 23-05-1992ம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் (பி.எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்) சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். தவருது கூட்டத்திற்கு சமூகமளித்து ஒத்துழைப்பு நல்குவாறு கேட்டுக்கொள்கின்ருேம்.

செயலாளர்,
ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்.

முக்கிய குறிப்பு:

கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெருதோர் தங்கள் கிளைக்குழுச் செயலாளரிடமோ அல்லது தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடனே தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்ருேம். (ஏ-2150)

## ★ தடைசெய்யப்பட்ட பொருட்களை வடக்கே கொண்டு செல்ல வவுனியாவில் இனி அனுமதி

(கொழும்பு)

வடக்கிற்கு எடுத்துச் செல்ல தடைவிதிக்கபபட்ட 43 வகைப் பொருட்களை வடக்கிற்கு கொண்டு செல்ல வேண்டுமானால் இனிமேல் வவுனியாவில் அனுமதி பெறலாம் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எம். ஐ. எம். ராபிக் கொழும்பில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தடைசெய்யப்பட்ட பொருட்களை வடக்கிற்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி இதுவரை கொழும்பிலேயே வழங்கப்பட்டதாகவும் இனிமேல் வவுனியாவில் வழங்கப்படும் என்றும் ஆயினும் மருந்து வகைப் பொருட்களை வடக்கிற்கு எடுத்துச் செல்வதற்கான அனுமதி தொடர்ந்தும் கொழும்பிலே வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். [சு]

## யாழ். - பருத்தித்துறைக்கு தினமும் பதினறு மினி பஸ் சேவை

(புலோலி)

பருத்தித்துறையிலிருந்து நெல்லியடி ஊடாக யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்றுவரும் மினிபஸ் சேவை அதிகரிக்கப்பட்டுவருகிறது.

தினமும் காலை 6 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், காலை 8 மணிக்கு யாழ்ப்பாணத்தில இருந்து பருத்தித்துறைக்கும் முதலாவது மினிபஸ் புறப்பட்டுவருகிறது. யாழ்ப்பாணத்திலிருந்து மாலை 5-30 மணிக்கு பருத்தித்துறைக்கும், மாலை 5 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கும் கடைசி மினி பஸ் புறப்படுகிறது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் மினிபஸ் சேவையில் தினமும் இருவழிக்கும் தலா 16 சேவைகள் நடைபெற்றுவருகின்றன என்து குறிப்பிடத்தக்கது.

## வடபகுதிக்கான பிரதம காரியாலயத்தை மாங்குளத்தில் நிறுவ முயற்சி

(கொழும்புத்துறை)

வடக்கு-கிழக்கு மாகாண நிர்மாண அமைச்சின் வடபகுதிப் பிரதம காரியாலயத்தை மாங்குளத்தில் நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யாழ். மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளராகக் கடமையாற்றி வன்னி மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள சி. பரஞ்சோதி இதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

மாகாண நிர்மாண அமைச்சின் இப்பிரதம காரியாலயம் முன் ஆலோசிக்கப்பட்ட பிரகாரம் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் காரியாலயங்களை மையமாகவுள்ள மாங்குளம் பிரதேசத்தில் அமைவதே சிறந்தது என்று அவர் மேலிடத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார். (154)

## நியமனம்

[மானிப்பாய்]

எழுதுவினைஞர் பதவிக்கு போட்டிப்பரீட்சைமூலம்அதிக புள்ளிகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட முதல் 83 பேருக்கு யாழ் அரச அதிபரினால் கடந்த 13 ம் திகதி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டது.

இவர்களில் 11 பேருக்கு யாழ் புனர்வாழ்வுப்பகுதிக்கும் 27 பேருக்கு சுகாதாரத்திணைக்களத்திற்கும், 48 பேருக்கு யாழ் கல்வித் திணைக்களத்திற்கும் நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. (71)

## பண்டத்தரிப்புமாணவருக்கு சகாய விலையில் சீருடைகள்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்கள், மாணவிகளுக்கு சகாய விலையில் சீருடைகளை துணியாக வழங்குவதற்கு 'போரூட்'' நிறுவனம் முன்வந்துள்ளது.

நீல நிற அரைக் காற்சட்டைக்கான துணி மீற்றர் 97 ரூபா 50 சதமாகவும், உயர்வகுப்பு மாணவர்களுக்கான வெள்ளை நிற பொலியெஸ்டர் காற்சட்டை துணி மீற்றர் 90 ரூபாவாகவும், மாணவிகளுக்கான வெள்ளை நிற பொலியெஸ்டர் துணி மீற்றர் 67 ரூபா 50 சதமாகவும் வழங்கப்படவுள்ளது.

சீருடைகளுக்கான துணி வகைகளை பெற்றுக்கொள்ள விரும்பும் பாடசாலைகள் பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## தமிழ்மொழி அமுலாக்கலை துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

அரச அலுவலகங்களில் தமிழ் மொழி அமுலாச்கல் தொடர்பிலான அலுவல்களைத் துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்மொழியை துரிதமாக அமுலாக்கவும். இது தொடர்பாக ஏற்படும் தடைகளை ஆராயும் நோக்கத்தோடும் விபரங்கள் பல கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்மொழியில் பெறப்படும் கடிதங்களின் தொகை அவற்றிற்கான பதில் ஒழுங்குகள் போன்ற விபரங்கள் அமைச்சுகள் திணைக்களங்களிலிருந்து கோரப்பட்டுள்ளது.

## கிழக்கில் மாணவர்காணமல் போயினர்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் கடந்த புதன்கிழமை, தமிழ் மாணவர் நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் கலைப்பதற்காக, பொலிஸார் நடாத்திய தடியடிப் பிரயோகத்தில் கைது செய்யப்பட்ட மாணவர் சிலர் காணமல் போயுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட மாணவர் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டதாக, பொலிஸார் தெரிவித்தபோதிலும் சில மாணவர்களை இன்னும் காணவில்லையென்றும், இச்செயலைக் கண்டித்து, நேற்று முன்தினம் மட்டுநகர்ப் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்ததாகவும் கூறப்படுகின்றது. (வி)

## கிணற்றில் தவறி விழுந்த சிறுவன் மரணம்

(வட்டுக்கோட்டை)

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வந்த 7 வயதுச் சிறுவன் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் தமது தாயாரைப் பார்க்கப் போவதற்காக முகம் கழுவ கிணற்றில் தண்ணீர் அள்ளிய போது தவறிவிழுந்து நீரில் மூழ்கி மரணமான சம்பவம் ஒன்று சங்கானைப்பகுதியில் நடைபெற்றுள்ளது.

காரைநகர் தோப்புக்காடு கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து சங்கானையில் தங்கியிருந்த செல்லத்துரை தவவடிவேல் தவச்செல்வரூபன் என்ற சிறுவனே நேற்று முன்தினம் மரணமானவராவார். (137)

## வர்த்தகமானி பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி பயிலுனர்களை நிரந்தரமாக்குவதற்கான பரீட்சை விண்ணப்பப்படிவம் முறைமைகள் பகுப்பாளர் பதவி விண்ணப்பப்படிவம், கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் பதவி விண்ணப்பப்படிவம், என்பவற்றை உள்ளடக்கிய 24-4-92, 08-05-92 திகதியிடப்பட்ட அரச வர்த்தகமானிகள் மறுமலர்ச்சிக்கழக நூலகத்தில் பார்வையிடலாம்.

## நல்லின கால்நடைகள் இனவிருத்தி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, பாலப்பாணி ஆகியஇடங்களில் கால்நடைப் பண்ணைகள் தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளன. இப்பண்ணையில் நல்லின மாடுகள் இனவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. நல்லின மாடுகளை இனவிருத்தி செய்யுமுகமாக இங்கு சிந்தி இன மாடுகள் பராமரிக்கப் பட்டுவருகின்றன.

## இந்திய புலனாய்வு துறையின் கண்டுபிடிப்பு இது

(சென்னை)

இந்திய அமைதிப்படை இலங்கையில்நடந்துகொண்ட இராணுவ நடவடிக்கைக்கு பழிதீர்க்கும் கைங்கரியமாகவே ராஜிவ் காந்தியை விடுதலைப்புலிகள் இயக்கம் கொலை செய்துள்ளது.

இவ்வாறு ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை நடாத்திவரும் இந்திய புலனாய்வு பணியகத்தின் விஷேட விசாரணைக்குழு தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது

## ★ புலிகள் மீது தடை கலைஞர் கருணாநிதி இரட்டை வேடம்?

(சென்னை)

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது மத்திய அரசு தடைவிதித்திருக்கும் செயலை தி. மு. க. தலைவர் ஆதரிக்கிறாரா அல்லது எதிர்க்கின்றாரா என்பதனை திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும் என தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் திரு. கருணாநிதி இரட்டை வேடம் பூண்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார். (க)

## யாழ். ஆயருக்கு பாராட்டு வைபவம்

(யாழ்ப்பாணம்)

"நான் குருத்துவ வாழ்வில் பிரவேசிப்பதற்கு ஆணிவேராக இருந்தது நான் முதலில் கல்வி கற்ற புனித பத்திரியார் கல்லூரிதான்."

இவ்வாறு யாழ். ஆயர் கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை புனித பத்திரிசியார் கல்லூரி முன்றலில் யாழ்.நகர் கத்தோலிக்க பாடசாலை மாணவர்களாலும் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர்களாலும் ஒன்றிணைந்து அழிக்கப்பட்ட பாராட்டு வைபவத்தில் கூறினார்.

இக்கல்லூரியில் நான் கல்வி கற்றகாலம் முழுவதும், வகுப்பில் முதல் மாணவனாகவே திகழ்ந்தேன். அன்றிலிருந்து நான் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் குருத்துவப் பணிக்காக கல்விகற்கும் போதெல்லாம் முதலாவது இடத்தையே வகித்துவந்தேன் என்றும் கூறினர்.

இவ்வைபவத்தில் யாழ். நகரிலுள்ள 16க்கும் மேற்பட்ட கத்தோலிக்கப் பாடசாலை மாணவர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டார்கள் புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண. பிரான்ஸிஸ் ஜோசப் அனைவருக்கும் நன்றிதெரிவித்தார். (வி)

## சாரணர் நிதிசேர்ப்பு வாரம்

(வட்டுக்கோட்டை)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தினர் சாரணர் நிதிசேகரிப்பு வாரம் ஒன்றினை 15ம் திகதி முதல் 23ம் திகதி வரை நடத்துகின்றனர். (139)

## இன்றைய பலன்

17 - 05 - 1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு வைகாசி 04)

பிரதமை மு. இ 10.17 வரை; அனுஷம் பி. இ. 12.51 வரை மரணயோகம், இராகுகாலம் மாலை 4.23 முதல் 5-53 வரை, சுபநேரம் காலை 8. 53 முதல் 10.2௦வரை

மேடம்:- குடும்பமனஸ்தாபம், வாக்குகலகம் நிலைமாற்றம்.

இடபம்:- சத்துருவெற்றி, குடும்பசுகம், தானதர்மம்.

மிதுனம்:- காரியசித்தி இனசனமகிழ்ச்சி, பெருமை.

கடகம்:- பணியாள் துன்பம், குடும்பபகை, அலைச்சல்

சிங்கம்:- மனக்கவலை, அவமதிப்பு, முன்கோபம்.

கன்னி:- தொழிலமேன்மை, இனசனவரவு, அதிகாரம்.

துலாம்:- வீண் மனஸ்தாபம், பழையபகை, மனச்சுமை,

விருச்சிகம்:- பெரியோர் சகாயம் பணவரவு, தொழில் பிரயாசம்

தனுசு:- இனசனவிரோதம், அதிக யோசனை, விதண்டாவாதம்

மகரம்;- புத்திமேன்மை, நண்பர் வருகை, சுபகாரியம்

கும்பம்:- பணக்குறைவு, குடும்பசுகம், கடித உறவு

மீனம்:- வாக்குவசீகரம் தொழில்மந்தம், புத்திரர் செலவு.

ஜோஸ்யர்.

## உதைபந்தாட்ட பேட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்திவரும் உதைபந்தாட்ட போட்டியின் 2-ம் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்;

குருநகர் பாடும் மீன் எதிர் பாஷையூர் சென் அன்ரனீஸ், இப்போட்டி சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்]

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டு கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இன்றைய ஆட்டம்:

யாழ்,பல்கலைக்கழகம் (ஏ) எதிர் கலட்டி ஐ. வி. க. பன்னாலை கணேசன் (ஏ] எதிர் தோப்புக்காடு (பி) இப்போட்டிகள் யாழ் தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

கிரிக்கெட்

[யாழ்ப்பாணம்)

'ஷப்ரு' வெற்றிக் கிண்ணத்துக்காகஜொலிஸ்ராஸ் நடாத்தும் 30 ஓவர் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டம்:

காலை 8 30 மணி கிறுஸ் கொப்பர்ஸ் எதிர் யாழ். பல்கலைக்கழகம் மாலை 1.00 மணி ஸ்கந்தா எதிர் ஜொலிஸ்ராஸ் (புளூஸ்] (சி]

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை சிவன் கோவிலில் நடைபெற்றுவரும்இலட்சார்ச்சனை நிகழ்ச்சியில் இன்று மாலை 6மணிக்கு செல்வன் சி. சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

# பிரபாகரன் இருக்கும் இடம் எமக்குத் தெரியாது - பிரட்மன் கூறுகிறார்

(கொழும்பு)

ராஜீவ் கொலை வழக்கில் விசாரணைக்கு பிரபாகரன் தேவையென முதலில் இந்திய நீதிமன்றம் அறிவிக்க வேண்டும். அதன்பின் இலங்கை நீதிமன்றம் இதனை பரிசீலிக்கும் என திரு பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: எப்படி இருந்தாலும் பிரபாகரன் எம் பிடியில் இல்லை. அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியாது. எமது கட்டுப்பாட்டிலும் இல்லை. இதுவும் பிரச்னையே என்றும் கூறினர். இதேவேளை விடுதலைப்புலிகளை இந்தியா தடை செய்தது ஒரு இலங்கைக்கு ஆச்சரியமளிக்கவில்லை இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே என்றும் கூறினர். (சி)

# 2 இளம் யுவதிகள் நேற்று தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு தினங்களில் இரு இளம் யுவதிகள் தற்கொலை செய்துள்ளனர். கோப்பாய் வடக்கைச் சேர்ந்த இளம் யுவதியான செல்வி கணேசலிங்கம் சந்திரவதனு (30 வயது) என்பவரும் கந்தர் மடம் பழம் வீதியைச் சேர்ந்த செல்வி எஸ். ஞானரூபி [30 வயது] என்ற யுவதியும் நேற்று தற்கொலை செய்துள்ளார்கள். (56)

# பரீட்சை மோசடி இப்படியும் நடக்கிறது

(கொழும்பு)

தென்பகுதிப் பாடசாலைகளில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற பரீட்சைகள் பலவற்றில் 9 முதல் 12 வயது வரையிலான மாணவர்கள் ஆள் மாறாட்டம் செய்து பரீட்சைத் திணைக்களத்தையும், பாடசாலை அதிபர்களையும் ஏமாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

5-ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, மற்றும் பிற பல பாடசாலைகளில் 6-ம் ஆண்டு அனுமதிக்கான பரீட்சைகளிலேயே இந்த ஆள் மாறாட்ட மோசடிகள் பல இடம்பெற்றுள்ளதாம்.

இம்மாணவர்களிடம் அடையாள அட்டைகள் இல்லாததால் இம்மோசடிகள் இடம் பெற்றதாகவும் இதற்கு மாற்று ஏற்பாடு தேவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## இன்று பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரமம் நடாத்தும் திரு. கா. நீலகண்டன் ஆசிரியருக்கான பாராட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் திரு. நீலகண்டன் ஆசிரியருக்குப் பொன்னாடை போர்த்தியும், பொற்கிழி வழங்கப்பட்டும் கௌரவிக்கப்படவுள்ளார்.

'மணி' என்ற பட்டமும் இன்று அவருக்கு வழங்கப்படும்.

# புலிகள்மீதான தடைஉத்தரவு ஆரம்ப நடவடிக்கையே! - அமைச்சர் சவான்

(புதுடில்லி)

விடுதலைப்புலிகள் மீதான தடை உத்தரவு ஓர் ஆரம்ப நடவடிக்கையே என இந்திய உள்துறை அமைச்சர் திரு. எஸ் பி.சவான் கூறியுள்ளார்.

அடுத்த நடவடிக்கை குறித்து இந்தியா விரைவில் ஆராயுமெனவும் அவர் ராஜ்ய சபாவில் நேற்றுமுன்தினம் கூறினர்.

புலிகளுக்கு தடை விதித்தால் மட்டும்போதாது, தமிழகத்திலுள்ள சில முக்கிய புள்ளிகளின ஆதரவுடனேயே புலிகள் காரியம் சாதித்து வருகின்றனர். இப்புள்ளிகளை உடனே பிடிக்க வேண்டும். அது எப்போது என திரு. சுப்பிரமணியசுவாமி கேள்வி எழுப்பியபோதே அமைச்சர் சவான மேற்கண்டவாறு கூறினர். (க-சி)

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

மேநாள் அன்று பல்கலைக் கழகத்திற்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட மிதிவண்டி ஒன்று அரசியல் பிரிவு, யாழ் மாவட்டச் செயலகம், கோண்டாவிலில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் தகுந்த அடையாளத்தை நிரூபித்து அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

## அஞ்சலி

(யாழ்ப்பாணம்]

யா/சித்தி விநாயகர் ம வி. இல் கல்விபயிலும் மாணவர் இயக்க உறுப்பினர் செல்வன் மதிவாணன் 14-5-92 அன்று பாடசாலை பணிகளில் ஈடுபட்டிருந்தவேளை எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் அகால மரணமடைந்தார். இவருக்கு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் தமது இதய அஞ்சலியை செலுத்துகின்றது

## ஆங்கில பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)

பரீட்சை திணைக்களம் அண்மையில் நடாத்திய ஆங்கில பரீட்சையின் முடிவுகள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார். (க)

## மைதான திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கரணவாய் மத்தியில் கருணையம்பதி 'கொலின்ஸ்' விளையாட்டுக்கழக விளையாட்டு மைதான திறப்புவிழா நாளை திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு வெகுசிறப்பாகநடைபெறவுள்ளது.

இத்திறப்பு விழாவையொட்டித்து இரு கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டிகள்நடைபெறும். முதல் போட்டியில் இளவாலை சென். ஹென்றீஸ் பாடசாலை 17 வயதிற்குட்பட்ட அணியும் கொலின்ஸ்கழக 17 வயதிற்குட்பட்ட வீரர்களும் மோதுவர்.

2-ம் போட்டியில் யங்ஹென்றீஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணிமோதும். (சி)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு சோல்ஸ்ரார் கழகம் நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி விண்ணப்ப இறுதி நாள் இம்மாதம் 18-ம் திகதியாகும். இவ்விளையாட்டுப் போட்டியில் பல முன்னணிக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

## புலிகள் பற்றி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருட சிறைத்தண்டனை விதிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சட்டம் பத்திரிகை சுதந்திரத்தையும்,பேச்சுரிமையையும் பெரிதும் பாதிக்குமென அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி-க)

## இந்திய அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கும் எதுவித தொடர்புமில்லை. இது குறித்து ஏற்கனவே இந்தியாவிற்கு இலங்கை வெளியுறவு அமைச்சு விளக்கமளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இலங்கை அரசு இனப் பிரச்னைத் தீர்வுக்குச் சகல விதத்திலும் சமாதான முயற்சியை மேற்கொள்ள எவருடனும் பேச்சுக்களை நடாத்துமெனவும் இலங்கை வெளியுறவு அமைச்சு தொடர்ந்தும் கூறி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## இலங்கைப் பிரச்னை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் தெரிவிக்கையில்: புலிகள் மீதான தடையை தமிழக அரசு பழிவாங்கும் நோக்கில் பயன்படுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் மீதுமத்திய அரசு விதித்துள்ள தடையுத்தரவு தேவையற்றதும், அவசரப்பட்டு எடுக்கப்பட்டதுமான ஒரு முடிவும் என பாட்டாளி மக்கள கட்சித் தலைவர் திரு. எம். ராமதாஸ் கருத்து வெளியிட்டுள்ளார். (க)

## 10 படையினரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் ஆனையிறவிலும் சில படையினரைக் காணவில்லை என்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

எனினும் இச் செய்திகளை கேர்ணல் முனசிங்க மறுத்துள்ளார். (சி)

## தி. மு. க. கோபாலசாமி

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

சேபிக்காமல் இருந்தால் உடனடியாக இந்த கைது நடைபெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுதொடர்பாக தமிழகத்திலிருந்து கிடைத்துள்ள தகவல் தொடர்பாக அடுத்து என்ன செய்யலாம் என்று இந்திய அரசியல் வட்டாரத்திலும் அதிகாரிகள் வட்டாரத்திலும் தீவிரமான ஆலோசனைகள் நடைபெற்று வருகிறது. (ரி)

## விவசாய பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பரந்தன் வை. எம். சி. ஏ. இளைஞர் பயிற்சி நிலையத்தின் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் விவசாய பயிற்சி வகுப்புகள் நடத்தப் பட்டு வருகின்றன. இவ் 6மாத கால விவசாய பயிற்சியின், வன்னிப் பிரதேசத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட19பயிற்சியாளர்கள் இம்மாத இறுதியில் தமது பயிற்சியினை முடித்துக் கொண்டு மக்களுக்கு சேவையாற்ற வெளியேறவுள்ளனர்.

## திலகர் மறுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளர் தொடர்புகொண்டு வினவியபோது இச்சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும எதுவித தொடர்பும் இல்லை என்று திரு. திலகர் தெரிவித்தார். [மா]

## செட்டிகுளத்தில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இடம்பெற்றுவருகிறது. இதன் ஒருகட்ட நடவடிக்கையாக கிறிஸ்தவகுளம் கிராமம் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு பின்னர் முன்னேற முயன்ற படையினர் புலிகளின் தாக்குதலை தொடர்ந்து பின்வாங்கிச் சென்றுர்கள். (ரி)

## ஐந்து சிங்களவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாத குழுவினல் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து மேலதிக விபரம் எதுவும் வெளியிடப்படவில்லை. (மா)

## வெருகலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை [45-வயது] ஆகியோரே இராணுவத்தினரால் வெட்டிக் கொல்லப்பட்டவர்களாவர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வெருகல், மூட்டுச்சேனை, கல் வெட்டுவான் ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்தபோதே 3 தமிழர் வெட்டிககொல்லப் பட்டதுடன் இங்குள்ள தமிழரின் பல வீட்டுடமைகள் சூறையாடப்பட்டன. (ரி)

## மாணவர் உணவு முத்திரை

யா. ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் நாளை திங்கட் கிழமை முதல் பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைக்கு பொருட்கள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வி)

# பல்கலைக்கழக மாணவர் அரசுமீது கண்டனம்

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 6, 500 பல்கலைக்கழக மாணவர்களில் 700பேருக்கு மட்டுமே விடுதி வசதிகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்களில் 50 வீதமானவர்கள் விடுதி வசதிகளை பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

நாட்டிலுள்ள மற்றைய பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்களுக்குப் போதியளவு விடுதி வசதிகள் கிடைக்கவில்லை என்று பல்கலைக்கழக மானியக் குழுவுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கொழும்பு பல்கலைக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் சில விஷேச பணி இராணுவத்திற்கும் அமைச்சுகளுக்கும் வேறு திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது (மா)

## யுத்தத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் அரசுமேற்கொண்டுள்ள யுத்தத்தை நிறுத்தி இராணுவத்தை அப்பகுதிகளில இருந்து விலக்கிக் கொள்வது என்ற கொள்கையை அனுமதிக்கிறீர்களா என்று பி. பி. ஸி. நிருபர் சோமவன்ச அமரசிங்கவிடம் கேட்டபோது:

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்ற கொள்கையில் எமக்கு எந்த வித மாற்றமும், மறுப்பும் இல்லை என்பதை வெளிப்படுத்துகிறோம்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தை உருவாக்கியது முதலாளித்துவ அரசே. அரசியல் தீர்வே இதற்கு தீர்வு. மக்களுக்கு எதிராக அரசு யுத்தத்தை நடத்துகிறது.

தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்கிறீர்களா என்ற கேள்விக்கு; இனத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது ஒரு இனத்தையும் ஏற்றுக்கொள்வதில்லை. சிங்கள இனத்தைப் பற்றியோ அல்லது தமிழ் இனத்தைப் பற்றியோ நாங்கள் குறிப்பிடுவதில்லை. சோஸலிச அமைப்பின் பிரகாரம் இலங்கையில் வசிப்பவர்கள் இலங்கையர்களே.

விஜயகுமாரணதுங்க, பிரேமகீர்த்திலால், அல்விஸ் குருகே ஆகியோரின் படுகொலைகளுக்கும் ஜனதா விமுக்தி பெரமுனைக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்ருர். [மா]

## வீடுகள், கடைகள் எரிப்பு

(திருமலை)

கடற்கரை சேனைக்கிராமத்திலுள்ள மீனவர்கள் இராணுவத்தால் துன்புறுத்தப்பட்டுள்ளதுடன் ஒருகடையும், ஒரு வீடும் தீமூட்டி எரிக்கப்பட்டது.

## இடிஅமினுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

இதேவேளை 'நக்கீரன்' சஞ்சிகையில், ஜெயலலிதாவின் ஆட்சியை வன்மையாகக் கண்டித்து இந்திரா காங்கிரஸ் பிரமுகர் திரு. சுப்பு 'இங்கே, ஒரு ஹிட்லர்' எனும் தலைப்பில் பரபரப்பான கட்டுரை ஒன்றை எழுதிவருகிறர். [சு]

## இரு அமைச்சர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரைவில் மக்கள் கிளர்ச்சி வெடிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அரசின் உல்லாசபயண விடுதிகள் அமைக்கும் திட்டத்தை தொடர்ந்து தம்புள்ளையிலுள்ள விவசாயிகள் பாதிக்கக் கூடியநிலையும் உருவாகிவருவதையிட்டு மக்கள் போராட்டம் இப்பகுதியில் நடைபெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81